| | | |
|---|---|---|
| அ.வ.எண் | : | **200/2017** |
| தேதி | : | **08.04.2025** |
| பெயர் | : | பாலுசாமி த/பெ. சின்னதம்பி |

**வா.த.சா.3/(PW3)** திரு. பாலுசாமி த/பெ. சின்னதம்பி என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>வா.த.சா.3 (PW3) - குறுக்கு விசாரணை</u>**

1) இவ்வழக்கின் வாதி எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி எனக்கு தெரியாது, அவரை நான் பார்த்ததும் இல்லை என்றால் சரிதான். வாதசா 2 எனக்கு தெரியும். எனக்கு தமிழ் எழுத படிக்கும் நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்து நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன்.

2) எந்த தேதியில் தாவா சொத்தை சுற்றி வேலி அமைக்க நான் சென்றேன் என்றால் சுமார் 7,8 வருடங்களுக்கு முன்னர் நானும், வாதசா 2ம் வேலி அமைக்க சென்றோம். வேலி அமைக்க யார் கூறியதன் பேரில் தாவா சொத்திற்க சென்றேன் என்றால் வாதி கூறியதன் பேரில் தாவா சொத்திற்கு வேலி அமைக்க சென்றேன். தாவா சொத்தின் விஸ்திரணம் தெரியுமா என்றால் தாவா சொத்து இரண்டு பிளாட்டுகள் 80க்கு 60 அடி விஸ்தீரணம் ஆகும்.

3) வாதி என்னை வேலி அமைக்க சொன்னதால் வேலி அமைக்க சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் அவர் தாவா சொத்தின் உரிமையாளரா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் வாதி தாவா சொத்தை வாங்குவதற்காக ஒப்பந்தம் போட்டுள்ளதாக கூறினார். வாதி யாருடன் கிரய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்ற விவரம் வாதி எனக்கு கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வேலி அமைக்க எத்தனை மணிக்கு எத்தனை நபர்களுடன் சென்றேன் என்றால் காலை சுமார் 09.00 முதல் 10.00 மணி அளவில் நானும், வாதசா 2 ம் மற்றும் வாதியுடன் சென்றோம். வாதசா2 எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் சுமார் 30 வருடங்களாக பழக்கம். நாங்கள் இருவரும் ஒன்றாக தொழில் செய்து வருகிறோம்.

4) வாதசா 2 தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நானும் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். வாதசா 2 தனது சாட்சியத்தில் நான் அவருடன் தாவா சொத்திற்கு வேலி அமைக்க சென்றதாக

குறிப்பிடவில்லை நான் கூறுவது போல் நானும் அவருடன் சென்றிருந்தால் அவர் தனது சாட்சியத்தில் அந்த விவரத்தை கூறியிருப்பார் நான் வழக்கிற்காக தாவா சொத்திற்கு நானும், வாதசா 2 ம் வேலி அமைக்க சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேலி அமைக்க கூலியாட்கள் யாரையாவது கூட்டி சென்றோமா என்றால் இல்லை நானும் வாதசா2ம் தான் சென்றோம்.

5) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். வாதியும் ரியல் எஸ்டேட் தொழில் தான் செய்துவருகிறார் என்றாலும், நான் கூறுவது போல் வேலி அமைப்பதற்கு தாவா சொத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தில் வேலி அமைக்க சென்றபோது பெயர் தெரியாத இரு நபர்கள் வேலி அமைக்க கூடாது என்று தொந்தரவு செய்தார்கள். நாங்கள் கிளம்பிவந்துவிட்டோம். அவர்கள் யார் என்று தெரியாது. அதன் பின்னர் நானும், வாதசா2 மற்றும் வாதி ஆகியோர் மணிமங்கலம் காவல் நிலையம் சென்று மேற்படி பெயர் தெரியாத இரு நபர்கள் மீது புகார் கொடுத்தோம்.

6) மணிமங்கலம் காவல் நிலையத்தில் புகாரை யார் கொடுத்தது என்றால் வாதி தான் புகார் கொடுத்தார். அதன் பின்னர் புகார் என்ன ஆனது என்றால் காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் சென்று தீர்வு காணுமாறு ஆலோசனை கூறி அனுப்பிவிட்டனர். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த அன்றே புகார் மீது விசாரணை செய்யாமல் அனுப்பிவிட்டனர் என்றால் சரிதான். மேற்படி புகார் கொடுத்ததற்கு மனு ஏற்பு ரசீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றாலும், அப்படி புகார் கொடுத்திருந்தால் அதற்காக காவல் நிலையத்தில் புகார் மனு ஏற்பு ரசீது கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அழைப்பணை வரவில்லை வாதி சுப்பிரமணி கேட்டுக்கொண்டதன் இனங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதி எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலி மனை என்றால் சரிதான்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. I. Vino,
District Munsif,
Sriperumbudur.